மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 253, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

253—

சிறு படகுகள் நிறுத்தும் வசதி

***6890—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, சந்திரபாடி ஊராட்சியின் அருகில் நண்டலாற்றின் கடல் கழிமுகப் பகுதியை ஆழப்படுத்தி சிறு படகுகள் நிறுத்தும் வசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதி, சந்திரபாடி மீனவக் கிராமத்தில் முதற்கட்டமாக மீன் இறங்குதளம் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவின் நம்பர் ஒன் முதலமைச்சர் அவர்களுக்கு எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொண்டு, எனது பூம்புகார் தொகுதி சுமார் 20 கி.மீ. தூரம் கடற்கரையை ஒட்டிய பகுதியாகும். அங்கே மீனவர்கள் அதிகம் வசித்து வருகிறார்கள். சந்திரபாடி கிராமம், சீனூர்பேட்டை ஊராட்சியைச் சேர்ந்ததாகும். அந்தக் கிராமம் காரைக்கால் யூனியன் பிரதேசத்தை ஒட்டிய பகுதியாகும். மறுபுறத்தில் நண்டலாற்றின் கரை அமைந்துள்ளது. தமிழக எல்லையான தரங்கம்பாடி, பொறையாறு வருவதென்றால் சுமார் 3 கி.மீ. கடந்து வரவேண்டும். அந்தக் கிராமம் தனித் தீவு போல் அமைந்துள்ளது. அந்தக் கிராமத்தில் 400-க்கும் மேற்பட்ட* fibre

2022 மே 10]

படகுகள் உள்ளன. கடல் சீற்றத்தின்போது நங்கூரமிடுவதற்கு மீனவர்கள் மிகவும் சிரமப்படுகின்றார்கள். மீனவர்களின் சிரமத்தினைப் போக்குவதற்கு நண்டலாற்றின் படுகை பகுதிகளில் மண்ணைத் தூர்வாரி இருபுறமும் கற்களைக் கொட்டி, படகு வருவதற்கு ஏதுவாக உருவாக்கி, சிறிய படகு இறங்குதளம் அமைத்துக் கொடுத்தால், இந்தப் பகுதி மக்களுக்கு, மீனவர்களின் வாழ்வாதாரத்திற்கு சிரமம் இல்லாமல் இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் சட்டமன்றத் தொகுதி, சந்திரபாடி மீனவ கிராமத்தில் 26 விசைப் படகுகளும், 274 நாட்டுப் படகுகளும் உள்ளன. இங்குள்ள மீனவர்கள் மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்திடவும், மீன்களைச் சுகாதாரமான முறையில் கையாளுவதற்கும் போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினால் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர். எனவே, மீனவர்களின் இந்தச் சிரமங்களைக் களைந்திடும் வகையில், சந்திரபாடி மீனவ கிராமத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் படகு அணையும் சுவர், மீன் ஏலக் கூடம் மற்றும் வலை பின்னும் கூடம் ஆகிய வசதிகளுடன்கூடிய மீன் இறங்குதளம் அமைப்பதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதன்மூலம் சுமார் 550 மீனவக் குடும்பங்கள் பயன்பெறுவதோடு, அவர்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலை பெற்றிட இயலும் என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.

திரு. நிவேதா எம். முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இறங்குதளம் மட்டும் போதாது.

நண்டலாற்றின் குறுக்கே படகு வருவதற்கு ஏதுவாக இருபுறமும் கற்களைக் கொட்டிக் கொடுத்தால்தான் சிரமமில்லாமல் இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

அதேபோல, புதுப்பேட்டை, தாளம்பேட்டை, சின்னமேடு, சின்னங்குடி ஆகிய கிராமங்களில் சுமார் 800-க்கும் மேற்பட்ட fiber நாட்டுப் படகுகள் உள்ளன. அங்கு முன்கூட்டியே படகு இறங்குதளம் கட்டி முடிக்கப்பட்டு, 10 ஆண்டுகளுக்குமேல் பயன்பாடற்ற நிலையில் இருக்கிறது. ஆகையால், மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த படகுகள் வருவதற்கு ஏதுவாக, அம்மனாற்றைத் தூர்வாரி, இருபுறமும் கற்களைக் கொட்டிக்கொடுத்தால், முன்கூட்டியே அங்கு கட்டி முடிக்கப்பட்ட படகு இறங்குதளத்தைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு ஏதுவாக இருக்கும். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறையில் எங்களுக்கு ஆணைகள் வழங்கியிருக்கிறார்கள். அது என்னவென்றால், தமிழகத்தில் இருக்கின்ற அத்தனை கடற்பகுதிகளிலும் உள்ள மீனவர்களும் மீன் பிடிப்பதற்கு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் ஆய்வு செய்து, எதை முதலில் செய்ய வேண்டும், எதை பின்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வகையில் இன்றைக்கு மாண்புமிகு தளபதி அவர்கள் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

அந்தவகையில், மயிலாடுதுறை மாவட்டம், பூம்புகார் தொகுதியில் சந்திரபாடி மீனவ கிராமத்தில் மீனவர்கள் பயன்பெறும் வகையில், மீன்வளம் மற்றும் நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின்கீழ் முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் செலவில் மீன் இறங்குதளம் அமைப்பதற்கு, இந்தச் சட்டமன்றக் கூட்டத்தொடரில் மீன்வளம்-மீனவர் நலத் துறை மானியக் கோரிக்கையின்போது அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2022 மே 10]

அதன்படி விரைவில் பணிகள் துவங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதுபோல, சந்திரபாடி கிராமத்தின் நண்டலாற்றின் இருபுறமும் கருங்கல் தரை அமைத்து கடல் கழிமுகப் பகுதியை ஆழப்படுத்தி, படகுகளை நிறுத்தும் வசதிகளை ஏற்படுத்த தேவையிருப்பின் ஆய்வு செய்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைகளைப் பெற்று, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 254, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

254—

சுற்றுச் சுவர்

***475—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரிக்கலாம்பாடி ஊராட்சியில் உள்ள மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளியின் மாணவர் விடுதிக்கு சுற்றுச் சுவர் மற்றும் பாதை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், கரிக்கலாம்பாடி ஊராட்சியில் செயல்பட்டுவரும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவர் விடுதிக்கு சுற்றுச்சுவர் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இவ்விடுதிக்கான பாதையினைச் சீரமைக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*